<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 15-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | வயது | : | 62 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 17.10.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது கோயம்புத்தூரில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து கடந்த 2018 மே மாதம் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். கடந்த 03.05.2014 அன்று கடலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக இருந்தபோது அண்ணாமலை நகர் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட மாரியப்பா நகரில் உள்ள ஒரு வீட்டில் குற்றம் நிகழ்ந்திருப்பதாக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆய்வாளர் கொடுத்த தகவலின்பேரில் குற்ற நிகழ்விடத்தை பார்வையிட சென்றேன். குற்றம் நிகழ்ந்த இடத்தில், அந்த வீட்டின் தெற்கு புறமுள்ள ஒரு அறையில் எல்லா பொருட்களும் சிதறிய நிலையில் இருந்தன. அங்குள்ள தடய பொருட்களை சேகரித்து

ஆய்வாளருக்கு பரிந்துரை செய்தேன். அந்த அறையில் இருந்த எரிந்த நிலையில் இருந்த காகித துகள்கள், துரு பிடித்த ஆணி, பால்ரஸ் குண்டுகள், மண் மற்றும் எரிந்த நிலையில் இருந்த பட்டாசு குழாய்கள், எரிந்த நிலையில் உள்ள பட்டாசுகள், சணல் கயிறுகள், எரிந்து உடைந்த நிலையில் உள்ள கண்ணாடி பாட்டில் துண்டுகள், எரிந்த துணி துண்டுகள், சுவரில் படிந்திருந்த சிவப்பு நிற இரத்தம் போன்ற கறையை பெயர்த்தெடுத்து ஆய்வுக்கு அனுப்புமாறு கூறினேன். மேற்கண்ட பொருட்களில் எந்த வகையான வெடிப்பொருட்கள் இருப்பதை கண்டறிய ஆய்விற்கு அனுப்ப சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணை வாக்குமூலத்தில் தடயங்களை சேகரித்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவ இடத்திற்கு சென்று எந்த தடய பொருட்களையும் சேகரித்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 397/2017

அரசுதரப்பு 16 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மஞ்சுளாதேவி | வயது | : | 51 |
| தந்தை/கணவர் பெயர் | : | சாமிநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 17.10.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். 11.11.2014 அன்று நான் அறிவியல் உதவியாளராக சென்னை வெடிபொருள் பிரிவில் பணிபுரிந்து வந்தேன். எங்களது ஆய்வகத்தில் 23.09.2014 அன்று நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் நீதிமன்றத்திலிருந்து கடித எண். D.No.2693/2014, நாள்.19.09.2014 கடிதத்துடன் அண்ணாமலை நகர் காவல்நிலைய குற்ற எண். 125/2014 சம்மந்தமான வழக்கு பொருட்கள் 7 முத்திரையிடப்பட்ட காகித பொட்டலங்களில் திரு.ரவி தலைமைக்காவலர் 307 அவர்கள் வாயிலாக எங்களது அலுவலக வரவேற்பு பிரிவில் பெறப்பட்டு எனக்கு வெடிபொருள் பிரிவில் எங்கள் துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டு அவர்களுடன் இவ்வழக்கை ஆராய்ந்து அறிக்கை

எண்.EXP.100/2014, நாள்.11.11.2014 அன்று தயார் செய்து கீழ்கண்டவாறு நீதிமன்றத்திற்கு அதன் முடிவுகள் அனுப்பப்பட்டது.

இனம் 1

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP 146/2014 Item 5 என்று எழுதப்பட்டதில் பேப்பர் துகள்களும், குப்பைகளும் காணப்பட்டன.

இனம் 2

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014 Item 6 என்று எழுதப்பட்டதில் துரு பிடித்த பால்ரஸ் குண்டுகள் காணப்பட்டன.

இனம் 3

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014 Item 7 என்று எழுதப்பட்டதில் துரு பிடித்த ஆணிகள் காணப்பட்டன.

இனம்4

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014 Item 9 என்று எழுதப்பட்டதில் அவற்றில் மண் மற்றும் குப்பைகள் காணப்பட்டன.

இனம் 5

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014, Item 23 என்று எழுதப்பட்டதில் எரிந்த பேப்பர் குழாய்கள் காணப்பட்டன.

இனம் 6

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014 Item 24 என்று எழுதப்பட்டதில் உடைந்த கண்ணாடித்துண்டுகள் மற்றும் எரிந்த துணி துண்டுகள் காணப்பட்டன.

இனம் 7

முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தில் CP.146/2014, Item 25 என்று எழுதப்பட்டதில் எரிந்த குப்பைகள் காணப்பட்டன.

முடிவு -

மேலே குறிப்பிடப்பட்ட 7 இனங்களும் தனித்தனியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றில் சல்பர், அலுமினியம், பொட்டாசியம், குளோரேட், சல்பேட், மற்றும் தயோ சல்பேட், கண்டறியப்பட்டன.

குறிப்பு -

1)ஆய்வுக்குரிய பொருட்கள் எங்கள் ஆய்வகத்தில் எண்கள் வழங்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

2) 1 முதல் 7 வரையுள்ள இனங்களில் குறைந்த சக்தி வாய்ந்த நாட்டு வெடிகுண்டுகளில் காணப்படும் வெடிப்பொருட்கள் ஆகும். நாட்டு வெடி குண்டு அல்லது குறைந்த சக்தி வாய்ந்த வெடி பொருள் வெடித்தால் உயிருக்கும் உடமைக்கும் சேதம் ஏற்படலாம்.

3) ஆய்வுக்கு போக எஞ்சிய வழக்கு பொருட்கள் EXP.3/2014 என எண் எழுதப்பட்டு எங்கள் ஆய்வக முத்திரையுடன் ஆய்வக அறிக்கையுடன் நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம்

நீதிமன்றத்திற்கு திரு.சிவபெருமாள் தலைமைக்காவலர் 2207 அவர்கள் மூலம் 12.12.2014 அன்று திருப்பி அனுப்பப்பட்டது. மேற்படி ஆய்விற்கு நான் வழங்கிய ஆய்வறிக்கை அசாஆ.14 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - மேற்படி வழக்கு சொத்துக்கள் தனித்தனியாக வெளியில் கிடைக்கக்கூடியதுதான். நான் கூறுவதுபோல் அண்ணாமலை நகர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வுக்கு எந்த பொருட்களும் அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காண்பித்த ஆய்வறிக்கை இந்த வழக்கிற்கு சம்மந்தப்படாதது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.